# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அணுகி தான் கட்டிய புதிய வீட்டிற்கு வீட்டு வரி நிர்ணயம் செய்ய மனு கொடுத்திருந்ததாகவும் மனுவை பார்வையிட்ட வரித்தண்டலர் திரு.கார்த்திகேயன், சிவகாசி முனிசிபாலிட்டி, விருதுநகர் மாவட்டம் அவர்கள் ரூ.10,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 03.11.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது விருதுநகர் மாவட்டம், சிவகாசி முனிசிபாலிட்டி, வரித்தண்டலர் திரு.கார்த்திகேயன் புகார்தாரரிடமிருந்து ரூ.10,000/- கையூட்டாக வாங்கும்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.